RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22254

OPEN ACCESS

# பத்துப்பாட்டில் யாழ்

ரா.வி. ரெமிக்கா [அ, *], க. அஜி [அ]

[அ] தமிழ்த்துறை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) தொலையாவட்டம், குமரி மாவட்டம் 62957, இந்தியா.

# Yazh in the Pathupaattu

R.V. Remika [a, *], K. Aji [a]

[a] Department of Tamil, Annai Velankanni College (Affliated to Manonmaniam Sundranaar University) Tholayavattom-629157, Kanniyakumari, Tamilnadu, India

* Corresponding Author: remika271996@gmail.com

Received: 05-01-2022
Revised: 08-04-2022
Accepted: 11-04-2022
Published: 30-04-2022

Check for updates

## ABSTRACT

The Yazh is one of the most special of the ancient musical instruments. Yazh means made or tied on the strings. Generally, the instruments that produce music are classified as percussion instruments, percussion instruments, nerve instruments, and non-stringed instruments. Among these, the Yazh, which is a nerve instrument, is the first musical instrument played by the Tamils. The Yazh is the original instrument that is responsible for the development of nerve instruments. This instrument has completely disappeared and the Veena, which came after it, today occupies the leading place among the nerve instruments. That is also the name of the Yazh.

**Keywords:** Music, Yazh, Periyazh, Seereeyazh, Musical Instrument

## முன்னுரை

யாழ் என்பது பழந்தமிழர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த நரம்பிசைக் கருவிகளில் ஒன்றாகும். தற்போது நாம் பயன்படுத்தி வருகின்ற வீணை எனும் நரம்பிசைக் கருவியின் முன்னோடி என்று நாம் யாழைக் குறிப்பிடலாம். இரண்டுக்குமே பல ஒற்றுமைகள் உண்டு. சில வேற்றுமைகளும் உண்டு. யாழின் அமைப்பானது காலந்தோறும் மாறியே வந்துள்ளது. பேரியாழ், சீறியாழ், சகோடயாழ் என்று பலவகையான யாழ்கள் பழக்கத்தில் இருந்துள்ளன.சங்க காலத்தில் பயன்படுத்திய யாழ் பற்றிய செய்திகளை பத்துப்பாட்டு நூல்கள் வழியாக இக்கட்டுரையில் காண்போம்.

## பத்துப்பாட்டு

“முருகு பொருநாறு பாணிரண்டு, முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி, - மருவினிய
கோலநெடு நல்வாடை, கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும் பத்து”

சங்க நூல்களாக திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு,

பட்டினப்பாலை, மலைபடுகடாம் ஆகிய பத்து நூல்களும் பத்துப்பாட்டு என அழைக்கப்படுகின்றன. இவை பல ஆசிரியர்களால் பல்வேறு காலக்கட்டங்களில் எழுதப்பட்டவை ஆகும். இந்த பத்துப்பட்டிற்கு உரை எழுதியவர் நச்சியார்க்கினியர் ஆவார். இவற்றில் யாழின் வகைகள், அவற்றின் உறுப்புகள் ஆகியவை பற்றிய செய்தியும் இடம்பெறுகிறது (Mohan, 2017).

## குறளும் இசையும்

உலக பொதுமறை எழுதிய வள்ளுவப்பெருமான் திருக்குறளில் இசைப் பற்றி பல குறள்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் குழல், யாழ், பண், பறை போன்ற பல்வேறு இசைக்கருவிகள் இடம்பெறுகின்றன அவையாவன,

“குழலினிது யாழினிது என்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்”

“கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன

வினைபடு பாலால் கொளல்”

“பண்ணென்னாம் பாடற்கு இயைபின்றேல் கண்ணென்னாம்

கண்ணோட்டம் இல்லாத கண்

“அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட

மறையிறர்க்கு உய்த்துரைக்க லான்”

“அனிச்சப்பூக் கால்களையா பெய்தாள் நுசுப்பிற்கு

நல்ல படாஅ பறை” -

“மறைபெறல் ஏரார்க்கு அரிதன்றால் எம்போல்

அறைபறை கண்ணார் அகத்து” (குறள் - 1180) - என்னும் குறள்களின் மூலமாக திருவள்ளுவர் காலத்திலே இசையின் தாக்கம் இருந்திருப்பதை அறியமுடிகிறது (Ramalinga Adikalar, 2015).

## தொல்காப்பியம்

சங்க நூல்களுக்கு முன்னதாகவே தொல்காப்பியத்தில் யாழ்க் கருவி பற்றிய குறிப்பு காணப்படுகிறது.தொல்காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர் ஆவார். இது ஒரு இசை இலக்கண நூல் ஆகும். இதில் ஐவகை நிலத்திற்குரிய இசைக்கருவிகளை குறிப்பிடுமிடத்து யாழ்க்கருவி பற்றிய குறிப்பும் காணப்படுகிறது.

“தெய்வ முணாவே மாமரம் புட்பறை

செய்தி யாழின் பகுதியோடு தொகைஇ

இவ்வகை பிறவும் கருவென மொழிப” (தொல்.அகத் .சூ.20. பக்கம் 16)

ஐவகை நிலத்திற்குரிய யாழ்க்கருவியாக,

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | - | குறிஞ்சி யாழ் |
| முல்லை | - | முல்லை யாழ் |
| மருதம் | - | மருத யாழ் |
| நெய்தல் | - | விளரி யாழ் |
| பாலை | - | பாலை யாழ் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது (Ilampooranar, 2014). |

## சங்ககால யாழ்

சங்ககாலத்தில் பாணர்கள், பொருநர்கள் போன்றோர் யாழினை மீட்டி இசையெழுப்பியதாக ஆற்றுப்படை இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. வெறுமனே இசையெழுப்பாமல் இசையுடன் பாடலைப் பாடி ஆட்டம் ஆடி மக்களையும் மன்னர்களையும் மகிழ்வித்திருக்கின்றனர். சங்ககாலத்து யாழ் அமைப்பு பற்றி சங்க இலக்கியங்களான பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுபடை, பெரும்பாணாற்றுப்படை மற்றும் மலைபடுகடாம் ஆகியவை மிக விரிவாகக் குறிப்பிடுகின்றன.

## யாழ் உறுப்புகள்

யாழ் உறுப்புகள் பின்வருமாறு,

1.பத்தல்

2.கோடு அல்லது மருப்பு

3.ஆணி

4.வெண்கை

5.நரம்பு

6.பச்சை

7.போர்வை

8.திவவு ஆகியனவாகும்.

## யாழின் தோற்றம்

இயற்கையோடு ஒத்து வாழ்ந்த பழந்தமிழர்கள் இயற்கையில் காணும் பொருள்களின் அசைவுகளிலும், அவை ஒன்றொடு ஒன்று மோதிக் கொள்வதால் உண்டாகும் அதிர்வுகளாலும் ஏற்படும் பலவித ஒலிகளைத் தங்களது நுண்ணிய செவியில் உணர்ந்து அனுபவித்தனர்.

வேட்டுவர்கள் தங்களது தொழிலைச் செய்யும் போது, இறுகக் கட்டிய வில்நாணில் இருந்த எழும் ஒலியை கேட்டு வில்லும் ஓர் இசைக்கருவியாக பயன்படக் கூடும் என்பதை நாளடைவில் உணர்ந்தனர்.

பசு கூட்டத்தை காட்டில் மேய்க்கச் சென்ற இடையன் தான் செய்த குழலை மீட்டி பாலைப்பண் வாசித்து அலுத்துபோய் இருக்கும் வேளையில், இன்னிசை தரும் வேடனின் வில்மீது கவனம் செலுத்தலானான். அவன் உடனே குமிழ மரத்தின் உள் துளைவுடைய கொம்பு ஒன்றை வெட்டி வளைத்து அதன் இரு நுனியலும் துளையிட்ட, அத்துளையின் துவாரத்தின் வழியாக 'மரல்' என்னும் மரத்தின் நாரை உரித்து திரித்துக் கொண்ட கயிற்றை நாணாக இறுகக்கட்டி தானும் ஒரு வில் செய்து கொண்டு, அதன் நாணை விரலால் தெறித்துக் குறிஞ்சிப்பண்ணை வாசிக்க அதிலிருந்து வில்யாழ் பிறந்தது. வில்யாழைப் பற்றிய வரலாறு பெரும்பாணாற்றுப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஒன்றுஅமர் உடுக்கை, கூழ்ஆர் இடையன்

கன்றுஅமர் நிரையொடு கானத்துஅல்க,

அம்நுண் அவிர்புகை கமழ, கைம்முயன்று

ஞெலிகோல் கெணட பெருவிறல் நெகிழிச்

செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்

இன்தீம் பாலை முனையின், குமிழின்

புழற்கோட்டுத் தொடுத்த மரல்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும், விரல் உறி,குறிஞ்சி,
பல்காற் பறவை கிளைசெத்து, ஓர்க்கும்
புல்ஆர் வியன்புலம் போகி"- (பெரும்பா 175-183)

மூலம் அறியமுடிகிறது (Mohan, 2017).

## யாழின் வகைகள்

இசைக்கருவிகளில் சிறப்பிடம் வகிக்கும் யாழினை நான்கு வகைப்படுத்துகின்றனர். அவை பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங் கோட்டியாழ் வில்யாழ் என்பன யாழின் வடிவம் அவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள நரம்புகளின் எண்ணிக்கை அடிப்படையில் ஒவ்வொரு வகை யாழுக்கும் பெயர் சூட்டப் பெற்றுள்ளது.

## யாழ்

பேரியாழை இசைப்போர் பெரும்பாணர் எனவும் சீரியாழை இசைப்போர் சிறுபாணர் எனவும் அழைக்கப் பெற்றனர். யாழினை இசைக்கும் பாணர்களைச் "சென்னியர்" என்று நற்றிணை 189-2 என்று குறிப்பிடுகிறது. 'சென்னி' என்பது பிச்சை எடுக்கும் மண்டை போன்றதொரு கலம்- யாழ் மீட்டுகின்ற கலையறிவு. அக்காலத்தை யாழின் குடத்திற்கு உவமையாக கூறுயுள்ளனர். மட்டுமின்றி உறுப்புகளைத் தனித்தனியே வருணித்திருப்பதால் யாழ் செய்யும் செய்தொழில் பண்டையத் தமிழர் பெற்றிருந்தனர்.

## பேரியாழ்

ஒன்பது எண் வடிவிலான வார்க்கட்டையும், வரகு கதிர்கள் போன்ற துணைகளையும், இத்துளைகள் நிரம்படியான ஆணிகள் பொருத்தப்பட்டு தொலானது பொன்னிறம் போன்று காணப்பட்டன என்பதனைக் காண்போம்.

"தொடித் திரிவு அன்ன தொண்டு படு திவவின்
கடிப்பகை அனைத்தும், கேள்வி போகாக்
குரல் லோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்
அரலை தீர உரீஇவரகின்
குரல்வார்ந் தன்ன நுண்டு களை இரீஇச்
சிலம்ப அமை பத்தல் பசையோடு சேர்த்தி
இலங்குதுளை செறிய ஆணி முடுக்கிப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால்
மடந்தை மாண்ட நுடங்கு எழில்ஆகத்து
அடங்குமயிர் ஒழுகிய அளவினில் திரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி
நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்

 DOI: 10.34256/irjt22254

களங்கர யன்ன கதழ்ந்துளிர் உருவின்” - (மலைபடு 21-36)

என்ற வரிகளில் பேரியாழின் அமைப்பை விளக்குவதுடன் சங்க கால மக்களின் இசை மற்றும் இசைக் கருவிகள் அமைத்த நுட்பத்தினையும் விளக்குகின்றது (Mohan, 2017).

## சீறியாழ்

“இன்குரற் சீறியாழ் இடவயிற் தழீஇ” - (சிறுபாணா - 35)

சீறியாழினை இசைப்பவர் சிறுபாணர் என்றழைக்கப்பட்டனர்.

“ஏழ் புணர் சிறப்பின் இன்றொடைச் சீறியாழ்”-(மதுரைக் 559)

பெண்கள் இயக்கிய சீறீயாழ் பற்றிய குறிப்பினையும், சீறீயாழ் ஏழ நரம்புகளால் ஆக்கப்பட்டிருந்த செய்தியினையும் இப்பாடல் மூலம் அறிய முடிகிறது.

மேலும்,

“பைங்கண் ஊகம் பாம்புபிடித்தன்ன
அங்கோட்டுச் செறிந்த அவிழ்ந்து வீங்கு திவவின்
மணி நிரைத் தன்ன வனப்பின் வாயமைத்து
வயிறுசேர் பொழுகிய வகையமை அகளத்துக்
கானக் குமிழின் கனிநிறங் கடுப்பப்
புகழ் வினைப் பொலிந்த பச்சையொடு தெம்பெய்து
அமிழ்து பொதிந் திலிற்றும் அடங்குபுரி நரம்பிற்
பாடுதுளை முற்றிய பயன் தெரி கேள்விக்
கூடு கொள் இன்னியங் குரல்குரல் ஆகி” -(சிறுபாணா -221-229)

குரங்கு பாம்பின் தலையைப் பிடித்தால் அது எவ்வாறு கையை நெகிழ்ந்தும், இறுகியும், சுற்றுமோ அவ்வாறு அமைந்த வார்க்கட்டும் மணிகளை வரிசையாக வைத்தது போன்று விளிம்புகளை இணைக்கும் ஆணிகள் காணப்பட்டமையும், குமிழம்பழம் நிறத்தில் அமைந்த போர்வை, முறுக்கடங்கிய நரம்புகள் பெற்று சிறீயாழ் காணப்பட்டதை மேற்கூறிய பாடல் வாயிலாக அறியமுடிகிறது (Mohan, 2017).

## வில்யாழ்

வில்யாழ் பற்றி பாணன் குறிஞ்சிப்பண் பாடியதாக குறிப்புண்டு. “புழற் கோட்டுத் தொடுத்த மரல்புரி நரம்பின் வில்யாழ் இசைக்கும் விரல் ஏறி குறிஞ்சி” (பெரும் 185-189) சங்க காலத்தில் யாழும் இசைவாணர்களும் உன்று பார்க்கும் போது இசைக்கருவிகளோடு பாடுதல் சங்க கால மரபாக இருந்திருக்கிறார்கள்.



அதனை பின்வரும் இலக்கியம் கூறுகிறது. “கை கவர் நரம்பின் பணுவற் பாணன்” (நற் 200.8). யாழும் இறைவழிபாடும் என்ற கருப்பொருளில் தெய்வங்களுக்கு வழிபாடு நடத்தும் போது யாழ் இசைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இன்னும் பிற இசை கருவிகளோடும் இசைக்கப்பட்டமை குறிப்பிட்டுள்ளது. “வண்டினங்களின் இரைச்சலோடு யாழினை இணைத்துப் பேசும் குறிப்புகள் காணப்பட்டன. அதாவது வண்டின் ஒலி பாலைப்பண் மற்றும் விளரிப் பணணை ஒத்துள்ளதாக கூறப்படுகிறது.(அகம் 317- 12-13) இது அளவில் சிறிதாய் இருக்கும் (Mohan, 2017).

## முடிவுரை

சங்க காலத்தில் பல்வேறு வகையான யாழ் கருவிகள் பயன்படுத்தப் பட்டமையும் அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமான நுட்பங்களைக் கொண்டமையும், பண்டைத் தமிழரின் இசை நுட்பத்தைப் பறைசாற்றுவதாக அமைகிறது. மேலும் ஆண் பெண் என இரு பாலரும் இசைக்கும், இசைக் கருவியாக யாழ் நிகழ்ந்ததுயாழின் பல்வெறு கால பரிணாம வளர்ச்சியே இன்றைய நரம்புக்கருவியான விணையாகும்.என்பதை இக்கட்டுரை மூலம் அறியமுடிகிறது.

## References

Ilampoorananar, (2014) Tolkappiyam porulathikaram, Thirteenth Edition, Saradha Publishing House, Chennai, India

Mohan, I. (2017) Patthuppattu, Sixth Edition, New Century Book House, Chennai, India

Ramalinga Adikalar, (2015) Thirukural Thelurai, Fourteenth Edition, Manivasagar Publishing House, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License